# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNUSRB இரண்டாம் நிலை ஆண், பெண் காவலர் தேர்வு

பாடம் : பொதுத்தமிழ்

பகுதி : செய்யுள் பகுதி

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் TNUSRB ஆண், பெண் இரண்டாம் நிலைக் காவலர் தேர்வுக்காண காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரித்தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனி நபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**இயக்குநர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# பொருளடக்கம்


- பாடநூலில் உள்ள செய்யுள் பகுதிகளின் சுருக்கமான குறிப்புகள்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
- எட்டுத்தொகை நூல்கள்
- பத்துப்பாட்டு நூல்கள்
- பன்னிரு திருமுறைகள்
- நூல் மற்றும் நூலாசிரியர்கள்
- அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்கள்
- அடைமொழியால் குறிக்கப்பெறும் சான்றோர்கள்
- வினாக்கள்
- இலக்கணக் குறிப்பறிதல்

# 6ம் வகுப்பு தமிழ்

## பாரத தேசம்

- ஆசிரியர் பெயர் : பாரதியார்
- தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கவிஞர்
- பாட்டுக்கொரு புலவன் பாரதி
- வாழ்ந்த காலம்:11.12.1882 முதல் 11.09.1921

## நான்மணிக்கடிகை

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்
- கடிகை என்றால் அணிகலன்
- ஆசிரியர் பெயர் : விளம்பி நாகனார்
- விளம்பி - ஊர்ப்பெயர்
- நாகனார் - புலவரின் இயற்பெயர்

## பாரதிதாசன்

- சிறப்பு பெயர்கள்:
  - புரட்சிக் கவிஞர்
  - பாவேந்தர்
- இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
- நூல்கள்:
  - பாண்டியன் பரிசு,
  - அழகின் சிரிப்பு,
  - குடும்ப விளக்கு
- வாழ்ந்த காலம்: 29.04.1891 முதல் 21.04.1964

## பழமொழி நானூறு

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்
- 400 பாடல்கள்
- ஆற்றுணா வேண்டுவது இல்.
- ஆசிரியர் : முன்றுரை அரையனார்
- முன்றுரை: ஊர்ப்பெயர்
- அரையன்: அரசன், புலவரின் குடிப்பெயர்

## சித்தர் பாடல்

- 400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்
- பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணி சித்தர் காரணப்பெயர்கள்

## புறநானூறு

- ஔவையார்
- அதியமானின் நண்பர்

## திண்ணையை இடித்து தெருவாக்கு

- ஆசிரியர் பெயர் : தாராபாரதி
- எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர் .
- தமிழக அரசின் நல்லாசிரியர் விருது
- நூல்கள்:
    - புதிய விடியல்கள்,
    - இது எங்கள் கிழக்கு,
    - தாராபாரதி கவிதைகள்.
- வாழ்ந்த காலம்: 26.02.1947 முதல் 13.05.2000

## செய்யும் தொழிலே தெய்வம்

- ஆசிரியர் : பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
- சிறப்பு: மக்கள் கவிஞர்
- ஊர்: செங்கப்படுத்தான் காடு, பட்டுக்கோட்டை
- காலம்: 13.04.1930 முதல் 08.10.1959 வரை

## கடுவெளிச்சித்தர்

- 200 முதல் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் .
- துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்.

## உடுமலை நாராயண கவி

- தமிழ் திரைப்படப் பாடல் ஆசிரியர் , நாடக எழுத்தாளர்
- பகுத்தறிவுக் கவிராயர்
- 25.09.1899 முதல் 23.05.1981 வரை

## குற்றால குறவஞ்சி

- திரிகூட ராசப்ப கவிராயர்
- குறவஞ்சி என்னும் இலக்கிய வகையை சார்ந்தது.
- ஊர்: திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர்
- 25க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.
- காலம்: கி.பி.19ம் நூற்றாண்டு
- ஒரு சொல்லோ தொடரோ இரு பொருள் தருமாறு பாடுவது சிலேடை அல்லது இரட்டுற மொழிதல்.
- இரட்டுற மொழிதல் = இரண்டு+உற+மொழிதல்
- இரண்டு பொருள்பட பாடுவது
- ஆறு – நீர் , ஓடுகின்ற ஆறு, 6, செல்லும் வழி

## 7ம் வகுப்பு தமிழ்

### தி.ரு.வி.க.

- திருவாரூர் விருத்தாசலனார் மகன் கலியாண சுந்தரனார்
- பெற்றோர் : விருத்தாசலனார் - சின்னம்மையார்
- ஊர் : காஞ்சிபுரம் (துள்ளம்), தற்பொழுது தண்டலம்
- சிறப்புகள்: தொழிலாளர் நலன், பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்
- மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர்
- தமிழ்த்தென்றல் என அழைக்கப்படுபவர்
- எழுதிய நூல்கள்:
    - மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,
    - பெண்ணின் பெருமை,
    - தமிழ்த்தென்றல்,
    - உரிமை வேட்கை,
    - முருகன் அல்லது அழகு,
    - பொதுமை வேட்டல்
- வாழ்ந்த காலம் : 1883 முதல் 1953 வரை
- பொதுமை வேட்டல் நூல்: பாடல்கள்-430, தலைப்புகள்- 44
    - தெய்வநிச்சயம் முதல் போற்றி
- பணி: சென்னை ராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியர்

### புறநானூறு

- பாடியவர் : மோசிகீரனார்
- மோசி என்பது ஊர்ப்பெயர்
- கீரன் என்பது குடிப்பெயர்
- சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசனால் கவரிப் வீசப்பெற்ற பெருமைக்குரியவர்.
- இவரது பாடல் இடம் பெற்ற நூல்கள்:
    - அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை

- நூல் வகை: எட்டுத்தொகை நூல்
- பாடல்கள்: 400
- நூல் பயன்:
    - பண்டைய தமிழக மன்னர்களின் வீரம், அற உணர்வு, கொடை, ஆட்சிச்சிறப்பு, கல்விப்பெருமை, நாகரீகம், பண்பாடு ஆகியவற்றை அறியலாம்

## முதுமொழிக்காஞ்சி.

- ஆசிரியர் : மதுரை கூடலூர் கிழார்
- மேற்கோளாக கையாண்டவர் : நச்சினார்க்கினியர்
- நூல் வகை: பதிணென் கீழ்க்கணக்கு நூல்
- துறை: காஞ்சித்திணை துறை
- வேறு பெயர் : அறவுரைக்கோவை
- பாடல்கள்: 100
- அதிகாரங்கள் : 10

## திரிகடுகம்

- ஆசிரியர் : நல்லாதனார்
- ஊர் : திருநெல்வேலி (திருத்து)
- சிறப்புப் பெயர் : செரு அடுதோள் நல்லாதன்
- நூல்வகை : பதிணென் கீழ்க்கணக்கு நூல்
- வெண்பாக்களின் எண்ணிக்கை: 100
- திரிகடுகம்: சுக்கு, மிளகு, திப்பிலி

## தனிப்பாடல்

## இரட்டுற மொழிதல்

- ஆசிரியர் : காளமேகப்புலவர்
- ஊர் : கும்பகோணம் (நந்திக்கிராமம்), விழுப்புரம் (எண்ணாயிரம்)
- இயற்பெயர் : வரதன்
- சிறப்புப் பெயர் : காளமேகப்புலவர்

- சிறப்புகள்: இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்

## திருவாரூர் நாண்மணி மாலை

- ஆசிரியர் : குமரகுருபரர்
- பெற்றோர்: சண்முகச் சிகாமணி கவிராயர் - சிவகாம சுந்தரி
- ஊர் : திருவைகுண்டம்
- நூல்கள்:
    - நீதிநெறி விளக்கம், முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம்
- நூல் வகை: 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- நால்வகையான பாடல்கள்:
    - வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா

## மெய்ப்பொருள் கல்வி

- ஆசிரியர் : வாணிதாசன்
- இயற்பெயர் : எத்திராசலு (எ) அரங்கசாமி
- பெற்றோர் : அரங்க.திருக்காமு – துளசியம்மாள்
- சிறப்புப் பெயர்கள் : கவிஞரேறு, பாவலர் மணி, தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்
- வாழ்ந்த காலம்: 1915 முதல் 1974
- எழுதிய நூல்: குழந்தை இலக்கியம்

## ஏர்முனை

- ஆசிரியர் : அ.மருதகாசி
- ஊர் : திருச்சி (மேலக்குடிகாடு)
- பெற்றோர் : அய்யம்பெருமாள் - மிளகாயி அம்மாள்
- சிறப்புப் பெயா;: திரைக்கவித் திலகம்
- வாழ்ந்த காலம்: 1920 முதல் 1989 வரை

## பொங்கல் வழிபாடு

- ஆசிரியர் : ந.பிச்சமூர்த்தி
- இயற்பெயர் : ந. வேங்கட மகாலிங்கம்
- ஊர் : தஞ்சாவூர் (கும்பகோணம்)
- பணி: 1924 முதல் 1938 – வழக்குரைஞர்
- 1938 முதல் 1954 – கோவில் நிருவாக அலுவலர்
- வாழ்ந்த காலம்: 1900 முதல் 1976
- பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை இவரது கவிதைகள்

## முக்கூடற் பள்ளு

- ஆசிரியர் : பெயர் தெரியவில்லை
- நூலின் பாங்கு: நாடகப் பாங்கு
- பா வகை: சந்தப்பா
- பேச்சு வழக்கு: திருநெல்வேலி மாவட்ட பேச்சுவழக்கு
- ஒன்பது மணிகள்
- முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், இரத்தினம், வைரம், வைடூரியம், கோமேதகம்

## தனிப்பாடல்

- ஆசிரியர் : அந்தகக் கவி வீரராகவர்
- ஊர் : காஞ்சிபுரம் (புதூர் )
- வாழ்ந்த இடம்: பொன் விளைந்த களத்தூர்
- தந்தையார் பெயர் : வடுகநாதர்
- சிறப்பு: சீட்டுக்கவி பாடுவதில் , நகைச்சுவை ததும்ப பாடல் இயற்றுபவர் .
- நூல்கள்: சந்திரவாணன் கோவை, சேயூர் பிள்ளைத்தமிழ்,
    - சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்ற புராணம்
- காலம்: கி.பி.17ம் நூற்றாண்டு இடைப்பகுதி

- மலையருவி நூலை இயற்றியவர் கி.வா.ஜெகந்நாதன்

## அம்மானை

- ஆசிரியர் : சுவாமிநாத தேசிகர்
- இயற்பெயர் : ஈசான தேசிகர்
- தந்தை பெயர் : தாண்டவ மூர்த்தி
- கல்வி கற்பித்தவர் : மயிலேறும் பெருமாள்

## திருச்செந்திற்கலம்பகம்

- நூல்வகை: 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று
- கலம்-12, பகம்-6

## சீவக சிந்தாமணி

- ஆசிரியர் : திருத்தக்கத் தேவர்
- குலம்: சோழ குலம்
- சமயம்: சமணம்
- நூல்கள்: சீவக சிந்தாமணி, நரி விருத்தம்
- நூல் வகை: ஐம்பெரும் காப்பியம்
- வேறுபெயர் : மணநூல்

## எங்கள் தமிழ்

- இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
- பெற்றோர் : கனகசபை - இலக்குமி அம்மையார்
- புலமை: தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம்

## உழவின் சிறப்பு

- ஆசிரியர் : கம்பர்
- ஊர் : தேரழுந்தூர் , மயிலாடுதுறை அருகில்
- தந்தை பெயர் : ஆதித்தன்
- ஆதரித்தவர் : சடையப்ப வள்ளல்

- நூல்கள்:
    - கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்
- சிறப்புப் பெயர்கள்:
    - கல்வியிற் பெரியவர் கம்பர் ,
    - கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிப்பாடும்
- காலம்: 12ம் நூற்றாண்டு

# 8ம் வகுப்பு

## தாயுமானவர்

- பெற்றோர் : கேடிலியப்பர் -கெசவல்லி அம்மையார்
- மனைவி:மட்டுவார் குழலி
- ஊர் : நாகப்பட்டினம்(திருமறைக்காடு) வேதாரண்யம்
- நூல்: தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
- பணி: திருச்சி (விஜயரங்க சொக்கலிங்கர் ) கருவூல அலுவலர்
- காலம்: 18ம் நூற்றாண்டு
- நினைவு இல்லம்: இராமநாதபுரம் (லட்சுமிபுரம்)

## திருக்குறள்

- நூல் வகை: பதினெண் கீழ்க்கணக்கு நூல்
- அடைமொழி: திரு
- சிறப்பு பெயர்கள்: முப்பால், வாயுறை வாழ்த்து, பொதுமறை,
- பொய்யாமொழி, தெய்வ நூல்
- அதிகாரங்கள்: 133
- குறள்கள்:1330
- மொழி பெயர்ப்பு: வீரமாமுனிவர் (இலத்தீன்),
    - ஜி.யு.போப் (ஆங்கிலம்)
- பெருமை சொல்லும் நூல்: திருவள்ளுவ மாலை
- பாதுகாப்பு இடம்:
    - உருசிய நாடு(கிரெம்ளின் மாளிகை),

- இங்கிலாந்து காட்சிச்சாலையில் திருக்குறள் (விவிலியம்)

## இனியவை நாற்பது

- ஆசிரியர் : பூதஞ்சேந்தனார்
- மதுரை தமிழாசிரியர்  மாக்காயனாரின் மகன்
- பாடல் எண்ணிக்கை:40
- ஊர் : மதுரை

## க. சச்சிதானந்தன்

- ஊர்: இலங்கை யாழ்ப்பாணம் (பருத்தித்துறை)
- பணி: ஆசிரியர் பயிற்சி கல்லூரி (விரிவுரையாளர் )
- புலமை: தமிழ், ஆங்கிலம் சமஸ்கிருதம்
- படைப்புகள்:
  - ஆனந்தத் தேன் (கவிதை)(1954),
  - அன்னபூரணி (புதினம்),
  - யாழ்ப்பாண காவியம்
- இவரது ஆசிரியர் : மகாவித்துவான் நவநீத கிருஷ்ண பாரதியார்
- பாடல் வெளிப்பாடு: கம்பனின் மிடுக்கு, பாரதியின் சினப்போக்கு

## திருவள்ளுவ மாலை

- ஆசிரியர் : கபிலர்
- காலம்: 2ம் நூற்றாண்டு
- நூல் சிறப்பு: திருக்குறளின் சிறப்பினை உணர்த்தும்
- பாடல்கள்: 55
- பாடியவர் : 53

## நளவெண்பா

- ஆசிரியர் : புகழேந்திப்புலவர்
- ஊர் : தொண்டை நாட்டின் பொன் விளைந்த களத்தூர்
- காஞ்சிபுரம் (பெருங்களத்தூர்)
- அவைப்புலவர் : வரகுணப்பாண்டியன்

- ❖ ஆதரித்த வள்ளல்: சந்திரன் சுவர்க்கி
- ❖ காலம்: 12ம் நூற்றாண்டு
- ❖ சிறப்புப் பெயர் : வெண்பாவிற் புகழேந்தி
- ❖ காண்டம்: 3 (சுயம்வரம், கலிதொடர் , கலிநீங்கு)
- ❖ பாடல்கள்: 431

## அசலாம்பிகை அம்மையார்

- ❖ ஊர் : திண்டிவனம்(இரட்டணை)
- ❖ நூல்கள்: ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம்,
- ❖ குழந்தை சுவாமிகள் பதிகம்
- ❖ சிறப்புப் பெயர் : இக்கால ஔவையார் (திரு.வி.க)
- ❖ வாழ்ந்த இடம்: திருப்பாதிரி புலியூர் (கடலூர் ), வடலூர்
- ❖ எழுதிய நூல்: இராமலிங்க சுவாமிகள் சரிதம்
- ❖ பாடல்கள்: 409
- ❖ காந்திபுராணம் பாடல்கள்: 2034
- ❖ பாட்டுடைத்தலைவன்: காந்தி

## காவடிச்சிந்து

- ❖ ஆசிரியர் : அண்ணாமலையார்
- ❖ ஊர் : திருநெல்வேலி (சென்னிகுளம்)
- ❖ பெற்றோர் : சென்னவர் - ஓவு அம்மாள்
- ❖ நூல்கள்: காவடிச்சிந்து, வீரை அந்தாதி,
- ❖ கோமதி அந்தாதி, வீரைப் பிள்ளைத் தமிழ்
- ❖ காலம்: 1861- 1890

## விக்கிரம சோழன் உலா

- ❖ ஆசிரியர் : ஒட்டக்கூத்தர்
- ❖ சிறப்புப் பெயர் : கவிச்சக்கரவர்த்தி
- ❖ அவைப்புலவர் : விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன்
- ❖ இயற்றிய நூல்: மூவருலா, தக்கயாகப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

- காலம்: 12ம் நூற்றாண்டு
- நூல் வகை: 96 சிற்றிலக்கிய வகை
- உலா பொருள்: ஊர் கோலம் வருதல், பவனி வரல்
- ஏழுவகை பருவ மகளிர்
    - பேதை
    - பெதும்பை
    - மங்கை
    - மடந்தை
    - அரிவை
    - தெரிவை
    - பேரிளம் பெண்
- மலரின் ஏழு பருவங்கள்
    - அரும்பு
    - மொட்டு
    - முகை
    - மலர்
    - அலர்
    - வீ
    - செம்மல்

## திருமந்திரம்

- பெயரடை: திரு
- காலம்: 5ஆம் நூற்றாண்டு பிற்பகுதி
- சைவத்திருமுறை வரிசை: 10
- வேறுபெயர் : தமிழ் மூவாயிரம்
- பாடல்கள்: 3000
- நம்முடைய பாடல்: 3ம் தந்திரம், 724
- புகழ்பெற்ற தொடர் : ஒன்றே குலம் ஒருவனே தேவன்

## தேம்பாவணி

- பிரிப்பு: தேம்பா+அணி, தேன்+பா+அணி

- இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தை: சூசையப்பர்
- நூல் சிறப்புப் பெயர் : கிறித்தவ சமயத்தாரின் கலைக் களஞ்சியம்
- காண்டங்கள்: 3
- படலங்கள்: 36
- பாடல்கள்: 3615
- தேன்+பா+அணி
- ஆசிரியர் : வீரமாமுனிவர்
- இயற்பெயர் : கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி
- பெற்றோர் : கொண்டல் போபெஸ்கி- எலிசபெத்
- ஊர் : இத்தாலி (காஸ்திக்கிளியோன்)
- புலமை: இத்தாலி, இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்.
- தமிழ் கற்பித்த ஆசிரியர் : மதுரை சுப்பிரத்தீப கவிராயர்
- தமிழகம் வந்த வயது: 30
- இயற்றிய நூல்கள்:
    - ஞானபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகாதி, திருக்காவலூர் கலம்பகம்,
- தொன்னூல் விளக்கம்.

## திருவருட்பா

- ஆசிரியர் :இராமலிங்க அடிகளார்
- பெற்றோர் : இராமையா-சின்னம்மை
- ஊர் : சிதம்பரம் (மருதூர்)
- சிறப்புப்பெயர்கள்: திருவருட்பிரகாச வள்ளலார்
- நிறுவியவை: சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞான சபை, சத்திய தரும சாலை
- நூல்கள்: திருவருட்பா, சீவகாருண்யம், மனுமுறை கண்ட வாசகம்
- காலம்: 1823 முதல் 1874
- திரு +அருட்பா
- மொத்த பாடல்கள்: 5818

## வில்லிபாரதம்

- **வில்லிபுத்தூரார்**
- பருவங்கள்: 10
- விருத்தப்பாடல்: 4350
- அவைப் புலவர் : வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்

## முடியரசன்

- இயற்பெயர் : துரைராசு
- பெற்றோர் : சுப்பராயலு-சீதாலெட்சுமி
- ஊர் : தேனி (பெரியகுளம்)
- நூல்கள்:
    - பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள்
- பணி: தமிழாசிரியர் மீ.சு. உயர் நிலைப்பள்ளி(காரைக்குடி)
- பட்டம்: கவியரசு(குன்றக்குடி அடிகளார் ) பறம்பு மலை விழா
- பரிசு பெற்ற நூல்: பூங்கொடி (1966)
- காலம்: 1920-1998

## கம்ப ராமாயணம்

- ஆசிரியர் : கம்பர்
- ஊர் : நாகை மயிலாடுதுறை (தேரழுந்தூர்)
- ஆதரித்தவர் : சடையப்ப வள்ளல்
    - இயற்றிய நூல்கள்: சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்,
- காலம்:9ம் நூற்றாண்டு
- நூலின் வேறு பெயர் : வழிநூல்
- காண்டம்: 6

## விழுதும் வேரும்

- ஆசிரியர் : பாரதிதாசன்
- இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
- பெற்றோர் : கனகசபை - இலக்குமி அம்மையார்h;

- ஊர் : புதுச்சேரி
- காலம்: 1891 முதல் 1964 வரை
- சிறப்புப்பெயர்கள்: பாவேந்தர் , புரட்சிக்கவிஞர்
- நூல்கள்: பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம், குறிஞ்சித்திட்டு, தமிழியக்கம்

## முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

- ஆசிரியர் : குமரகுருபரர்
- பெற்றோர் : சண்முக சிகாமணி கவிராயர் - சிவகாம சுந்தரி
- ஊர் : திருவைகுண்டம்
- நூல்கள்:
    - கந்தர் கலிவெண்பா, மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம்
- புலமை பெற்ற மொழிகள்: தமிழ், வடமொழி, இந்துஸ்தானி
- மடம் நிறுவிய இடம்: திருப்பனந்தாள், காசி
- இறந்த இடம்: காசி
- காலம்: 17ம் நூற்றாண்டு
- நூல்வகை: 96 சிற்றிலக்கிய வகையில் ஒன்று
- பிள்ளைத்தமிழ்
- இரண்டு வகைப்படும் -
    - ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ்
- இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவான பருவங்கள் 7
    - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி
- இறுதி மூன்று பருவங்கள்
    - ஆண்களுக்கு உரியது – சிற்றில், சிறுபறை, சிறுதேர்
    - பெண்பாலுக்கு உரியது – அம்மானை, கழங்கு, ஊசல்
- வருகைப்பருவம் என்பது ஆறாவது பருவமாகும்.

# 9ம் வகுப்பு

## திருக்குறள்

- மூன்று பிரிவுகள் : அறம், பொருள், இன்பம்
- வகைப்பாடு:
- அறம் : 38
- பொருள் : 70
- இன்பம் : 25
- உரை எழுதியோர் : பதின்மர்
- சிறந்த உரை: பரிமேலழகர் உரை
- பதின்மர்
    - பரிதி
    - தருமர்
    - மணக்குடவர்
    - தாமதத்தர்
    - நச்சர்
    - காளிங்கர்
    - பரிமேலழகர்
    - திருமலையர்
    - மல்லர்
    - பரிப்பெருமாள்
- இங்கிலாந்து நாட்டு மகாராணி காலையில் கண் விழித்ததும் முதலில் படித்த நூல் - திருக்குறள்

## சிறுபஞ்ச மூலம்

- ஆசிரியர் : காரியாசன்
- தந்தை : மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார்
- சமயம் : சமணம்
- மொத்த வெண்பாக்கள் : கடவுள் வாழ்த்துடன் 97
- நூல் வகை : பதிணென் கீழ்க்கணக்கு நூல்

## பாஞ்சாலி சபதம்

- ஆசிரியர் : பாரதியார்
- ஊர் : தூத்துக்குடி (எட்டயபுரம்)
- பிறப்பு : 11.12.1882
- இறப்பு : 11.09.1921
- பாரதியாரின் முப்பெரும் படைப்பு :
    - பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு
- நூலின் சிறப்புப் பெயர் : பெண்ணுரிமைக் காப்பியம்
- பாகங்கள் : 2
- சருக்கங்கள் : ஐந்து
- பாடல்கள் : 412
- சிறப்புப் பெயர்கள்:
    - பாட்டுக்கொரு புலவன் பாரதி, நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்கால
    - இலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியக்கவி, மாக்கவி
- இதழ் ஆசிரியர் : சுதேசமித்திரன், இந்தியா

## ஓய்வும் பயனும்

- ஆசிரியர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- ஊர் : சேலம் (சமுத்திரம்)
- பெற்றோர் : துரைசாமி-குஞ்சம்மாள்
- வாழ்ந்த காலம் : 10.03.1933 முதல் 11.06.1995
- நூல்கள் : கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம்
- நடத்திய இதழ்கள்:
    - தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்

## திருவிளையாடற்புராணம்

- ஆசிரியர் : பரஞ்சோதி முனிவர்
- ஊர் : நாகை மாவட்டத்தில் திருமறைக்காடு (வேதாரண்யம்)
- புலமை : வடமொழி, தமிழ்
- எழுதிய நூல்கள் : திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி
- காண்டங்கள் : மூன்று
  - மதுரைக்காண்டம் (18)
  - கூடற் காண்டம் (30)
  - திருவாலவாய் காண்டம் (16)
- உட்பிரிவு : படலம்
- விருத்தப்பாக்களின் எண்ணிக்கை : 3363
- உரை எழுதியவர் : ந.மு.வேங்கடசாமி
- திருக்குறளில் 10 அதிகாரங்கள் உடைமை என்னும் பெயரில் வந்துள்ளன.
- ஏழு என்னும் எண் பெயர் திருக்குறளில் 8 குறளில் இடம் பெற்றுள்ளது.

## இன்பம்

- ஆசிரியர் : சுரதா
- சிறப்புப் பெயர் : உவமைக்கவிஞர்
- ஊர் : திருவாரூர் (பழையனூர் )
- பிறந்த தேதி : 23.11.1921
- எழுதிய நூல்கள்: தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்

❖ விருதுகள் : கலைமாமணி பட்டம், பாவேந்தர் விருது

## முத்தொள்ளாயிரம்

❖ மூவேந்தர்களைப் பற்றிய நூல்
❖ புறத்திரட்டு நூல் வாயிலாக 108 வெண்பா, பழைய உரை நூல் வாயிலாக 22 வெண்பா

## கலிங்கத்துப் பரணி

❖ ஆசிரியர் : ஜெயங்கொண்டார்
❖ ஊர் : திருவாரூர் (தீபங்குடி)
❖ அரசவைப் புலவர் : முதல் குலோத்துங்கச் சோழன்
❖ புகழ்ந்தவர்கள்:

பரணிக்கோர் சயங்கொண்டர் - பலபட்டடைச் சொக்கநாதர்
தென்தமிழ் தெய்வப்பரணி – ஒட்டக்கூத்தர்

❖ எழுதிய நூல்கள் : இசையாயிரம், உலாமடல்
❖ காலம் : கி.பி. 12 ம் நூற்றாண்டு
❖ நூல் வகை : 96 சிற்றிலக்கியத்தில் ஒன்று.
❖ பரணி இலக்கியங்கள்:
  - தக்கயாகப் பரணி வங்கத்துப் பரணி
  - மோகவதைப் பரணி பாசவதைப் பரணி
  - சீனத்துப் பரணி திராவிடத்துப் பரணி

## உமர் கய்யாம் பாடல்கள் (115)

❖ ஆசிரியர் : கவிமணி தேசிக விநாயகனார்
❖ ஊர் : கன்னியாகுமரி (தேரூர் )
❖ பெற்றோர் : சிவதாணு - ஆதிலட்சுமி
❖ உமர் கய்யாம் : 16ம் நூற்றாண்டு
❖ முழுப்பெயர் : கியாசுதீன் அபுல்பாக் உமர் கய்யாம்

❖ புலமை : கணிதம், வானவியல்

❖ கவிமணி இயற்றிய நூல்கள்: மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தைச் செல்வம்,ஆசிய ஜோதி

❖ ரூபாயத் - 4 அடி செய்யுள்

## மணிமேகலை

❖ ஆசிரியர் : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

❖ இயற்பெயர் : சாத்தன்

❖ ஊர் : திருச்சி (சீத்தலை)

❖ கடைச்சங்கப் புலவருள் ஒருவர்

❖ சிறப்புப் பெயர்கள்: தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற் புலவன் - இளங்கோவடிகள் பாராட்டியுள்ளார்.

❖ வாழ்ந்த காலம் : கி.பி.இரண்டாம் நூற்றாண்டு

❖ நூல் வகை : ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்று.

❖ இரட்டைக் காப்பியங்கள் :

- மணிமேகலை, சிலப்பதிகாரம்

❖ நூலின் வேறு பெயர் : மணிமேகலைத் துறவு

❖ காதைகளின் எண்ணிக்கை : முப்பது

❖ ஆசிரியர் : வெ.இராமலிங்கனார்

❖ ஊர் : நாமக்கல் (மோகனூர் )

❖ பெற்றோர் : வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

❖ சிறப்பு : தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்

❖ விருது : பத்மபூஷண்

❖ சிறப்புப் பெயர் : காந்தியக் கவிஞர்

❖ வாழ்ந்த காலம் : 1888 முதல் 1972

❖ கவிதைகள்:

- தெய்வத்திருமலர் தமிழ்த்தேன் மலர்
- காந்தி மலர் தேசிய மலர்
- சமுதாய மலர் பெரியோர் மலர்
- திருநாள் மலர் சிறுகாப்பிய மலர்
- இசை மலர் அறிவுரை மலர்
- பல்சுவை மலர்

## இரட்சணிய யாத்திரிகம்

- ஆசிரியர் : எச்.ஏ. கிருட்டிணனார்
- ஊர் : திருநெல்வேலி (கரையிருப்பு)
- பிறந்த தேதி : 1827, ஏப்ரல் 23
- பெற்றோர் : சங்கர நாராயணர் - தெய்வ நாயகி அம்மாள்
- தமிழ் கற்பித்தவர் : சங்கர நாராயணர்
- வடமொழி கற்பித்தவர் : பிலவணச் சோதிடர்
- இலக்கணம் கற்பித்தவா; : மாணிக்கவாசகத் தேவர்
- பணி : சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியர்
- எழுதிய நூல்கள்: இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள்
- சிறப்புப் பெயர் : கிறித்தவக் கம்பர்
- இறப்பு : 1900, பிப்ரவரி 03
- நூல் தழுவல் : ஜான் பன்யன் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ்

## புறநானூறு

- ஆசிரியர் : நக்கீரனார்
- பாடல்கள் : 400
- இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர் .
- எழுதிய நூல்கள் : திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை

## குறுந்தொகை

- பிரிப்பு : குறுமை +தொகை
- நூல் வகை : எட்டுத்தொகை
- பாடல்கள் : 401 (கடவுள் வாழ்த்து உட்பட)
- அடிவரையறை : 4-8
- தொகுத்தவர் : பூரிக்கோ
- கடவுள் வாழ்த்து பாடியவர் : பெருந்தேவனார்

# 10ம் வகுப்பு

## மாணிக்கவாசகர்

- ஊர் : திருவாதவூர்
- அமைச்சர் : அரிமர்த்தன பாண்டியன்
- சிறப்பு: அழுது அடியடைந்த அன்பர்
- நூல்: திருவாசகம், திருக்கோவை
- எழுப்பிய கோவில்: திருப்பெருந்துறை (புதுக்கோட்டை)
- காலம்: 9ம் நூற்றாண்டு
- நூல்களின் திருமுறை எண்: 8ம் திருமுறை
- பாடல் எண்ணிக்கை: 658
- சிறப்புத் தொடர் : திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்

- மொழி பெயர்ப்பு: ஜி.யு.போப் (ஆங்கிலம்)
- சதகம்: 100 பாடல்கள்

## திருவள்ளுவர்

- சிறப்புப் பெயர்கள்: முதற்பாவலர் , தெய்வப்புலவர் , செந்நாப்போதார், பொய்யில் புலவர் , பெருநாவலர் ,
- காலம்: கி.மு. 31
- திருவள்ளுவர் நாள்: தைத் திங்கள் 2ம் நாள்
- வெண்பா: குறள் வெண்பா
- முப்பால்: அறம், பொருள், இன்பம்
- இயல்கள்: ஒன்பது
- திருக்குறள் பெருமை கூறும் நூல்: திருவள்ளுவ மாலை
- பதிப்பு: 1812 (ஞானப்பிரகாசம்) தஞ்சை

## ஏலாதி

- ஆசிரியர் : கணிமேதாவியார்
- மற்றொரு பெயர் : கணிமேதையர்
- சமயம்: சமண சமயம்
- காலம்: கடைச்சங்க காலம்
- நூல் வகை: பதினெண் கீழ்க்கணக்கு
- வெண்பாக்களின் எண்ணிக்கை: 81 (சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம்)
- சிறப்பு: தமிழுக்கு அருமருந்து போன்றது.
- ஏலாதி: 6 பொருள்கள்

## சிலப்பதிகாரம்

- ஆசிரியர் : இளங்கோவடிகள்
- தந்தை: இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தாய்: நற்சோணை
- தமையன்: சேரன் செங்குட்டுவன்
- துறவு பூண்ட இடம்: குணவாயிற்கோட்டம்

- காலம்: கி.பி.2ம் நூற்றாண்டு
- பிரிப்பு: சிலம்பு +அதிகாரம்
- காண்டங்கள்: 3
  - புகார் காண்டம்(10),
  - மதுரை காண்டம்(13),
  - வஞ்சிக் காண்டம்(7),
- காதைகள்: 30
  - நூலின் வேறு பெயர்கள்: உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், முதற் காப்பியம், முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம்
- புகழ்ந்தவர்கள்:
  - நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றொரு மணியாரம் படைத்த தமிழ்நாடு (பாரதியார்)
- ஐம்பெருங்காப்பியங்கள்:
  - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
- இதில் முதன்மையானது: சிலப்பதிகாரம்
- இரட்டைக் காப்பியம்: சிலப்பதிகாரம், மணிமேகலை
- கதை உருவம்: இசை நாடகம்
- உண்மைகள்: மூன்று

## கம்பர்

- ஊர் : தேரழுந்தூர், நாகை மாவட்டம் மயிலாடுதுறை
- தந்தை: ஆதித்தன்
- ஆதரித்தவர் : திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல்
- காலம்: கி.பி. 12ம் நூற்றாண்டு
- ஆயிரம் பாடலுக்கு ஒருமுறை, சடையப்ப வள்ளலை பாராட்டினாh;.
- கம்பரின் புகழ்மிக்க தொடர் :
  - கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்
  - விருத்தமெனும் ஒண்பாவுக்கு உயர் கம்பன்

  - கல்வியிற் பெரியர் கம்பர்

- வடமொழியில் எழுதியவர் : வான்மீகி
- தமிழில் எழுதியவர் : கம்பர்
- கம்பரிட்ட பெயர் : இராமாவதாரம்
- காண்டங்கள்: ஆறு
- பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்
- காண்டம்: பெரும் பிரிவு
- படலம்: உட்பிரிவு

## நற்றிணை

- நூல் வகை: எட்டுத்தொகை நூல்
- அடைமொழி: நல்
- அடிவரையறை: 9 அடி சிற்றெல்லை முதல் 12 அடி பேரெல்லை
- தொகுத்தவர் : தெரியவில்லை
- தொகுப்பித்தவர் : பன்னாடு தந்த மாறன் வழுதி
- பாடல்கள்: 400
- பாடியவர்கள்: 275

## புறநானூறு

- ஆசிரியர் : கண்ணகனார்
- அவைக்களப் புலவர் : கோப்பெருஞ்சோழன்
- நூல் வகை: எட்டுத்தொகை நூல்

## பெரிய புராணம்

- ஆசிரியர் : சேக்கிழார்
- ஊர் : காஞ்சிபுரம் (குன்றத்தூர்)
- இயற்பெயர் : அருண்மொழித் தேவர்
- அமைச்சர் : அநபாயச் சோழன்
- பட்டம்: உத்தமச் சோழ பல்லவர் , தெய்வச் சேக்கிழார்
- காலம்: 12ம் நூற்றாண்டு

- சிவனடியார் : அறுபத்து மூவர் தொகையடியார் ஒன்பதின்மர் எழுபத்திருவர்
- சேக்கிழார் இட்ட பெயர் : திருத்தொண்டர் புராணம்
- பெருமை: உலகம், உயிர் , கடவுள் ஆகிய மூன்றையும் காட்டும்,

## தமிழ்விடு தூது

- ஆசிரியர் : தெரியவில்லை
- நால்வகைப்பாக்கள்:
    - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
- நாற்கரணங்கள்:
    - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
- செய்யுள் நன்னெறிகள்:
    - வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம்
- செய்யுள் நன்னெறிகள்:
    - அறம், பொருள், இன்பம், வீடு
    - போலிப்புலவர்கள் தலையில் குட்டுபவர் - அதிவீரராம பாண்டியன்
    - செவியை அறுப்பவர் – வில்லிபுத்தூரன்
    - தலையை வெட்டுபவர் : ஒட்டக்கூத்தர்
- நூல் வகை: 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

## தேவாரம்

### திருநாவுக்கரசர்

- ஊர் : திருவாமூர்
- பெற்றோர் : புகழனார் –மாதினியார்
- தமக்கையார் : திலகவதியார்
- பெற்றோர் இட்ட பெயர் : மருணீக்கியார்
- வேறு பெயர்கள்: தருமசேனர் , அப்பர் , வாகீசர்
- நெறி: தொண்டு நெறி

- சிறப்பு: தாண்டகம் பாடுவதில் வல்லவர்
- சிறப்புப் பெயர் : தாண்டக வேந்தர்
- காலம்: 7ம் நூற்றாண்டு
- தேவாரம் = தே+ஆரம், தே+வாரம்
    - 1-3 திருமுறை - திருஞானசம்பந்தர்
    - 4-6 திருமுறை - திருநாவுக்கரசர்
    - 7ம் திருமுறை - சுந்தரர்
    - 8ம் திருமுறை - மாணிக்க வாசகர்

## சீறாப்புராணம்

- ஆசிரியர் : உமறுப்புலவர்
- ஆசிரியர் : கடிகை முத்துப் புலவர்
- ஆதரித்தவர்கள்: வள்ளல் சீதக்காதி, அபுல் காசிம்
- வேறு நூல்கள்: முதுமொழிமாலை
- காலம்: 17ம் நூற்றாண்டு
- சீறா- வாழ்க்கை, புராணம்- வரலாறு
- காண்டங்கள்: 3. விலாதத்துக்காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், கிஜ்ரத்துக் காண்டம்
- விருத்தப்பாக்கள்: 5027

## நல்லந்துவனார்

- பாடல்கள் : கலித்தொகை - நெய்தல் கலியில் 33 பாடல்கள் பாடியுள்ளார் .
- பா வகை: கலிப்பா
- பாங்கு: நாடகப்பாங்கு
- பாடல் எண்ணிக்கை: 150 பாடல்கள்
- பிரிவுகள்: 5
- நூல் சிறப்பு: கற்றறிந்தார் ஏத்தும் கலி

## நந்திக் கலம்பகம்

- பாட்டுடைத் தலைவன்: மூன்றாம் நந்திவர்மன்
- காலம்: கி.பி.9ம் நூற்றாண்டு
- நூல் வகை: கலம்பக நூல்
- கலம்பகம்
- நூல் வகை: 96 சிற்றிலக்கியத்தில் ஒன்று
- கலம் 12, பகம் 6

## நாலாயிர திவ்விய பிரபந்தம்

- ஊர் : கேரளா (திருவஞ்சைக்களம்)
- பாடல்கள்: 105
- புலமை: வடமொழி, தென்மொழி
- எழுதிய நூல்கள்: தமிழில் பெருமாள் திருமொழி, வடமொழியில் முகுந்த மாலை
- காலம்: கி.பி.9ம் நூற்றாண்டு
- பாடியவர்கள்: 12 ஆழ்வார்கள்
- திருவரங்கத்தின் மூன்றாவது மதில் குலசேகரன் வீதி என அழைக்கப்படும்.

## நிற்க நேரமில்லை

- ஆசிரியர் : சாலை இளந்திரையன்
- பெற்றோர் : அன்னலட்சுமி- இராமையா
- ஊர் : திருநெல்வேலி (சாலைநயினார் பள்ளிவாசல்)
- தமிழ்த்துறைத் தலைவர் : தில்லிப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்
- நிறுவியவை:
    - உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், இந்தியப் பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்றம், தில்லித்தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
- விருது: 1991ல் பாவேந்தர் விருது
- காலம்: 1930 முதல் 1998